1970 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) & (இ) இன்ஸ்பெக்டர்கள் ஆறு பேர்கள் உட்பட, 11 பேர்கள் கொளகட்டூர் பலநோக்க கூட்டுறவுச் சங்கதின் நிதியை ரூ. 35,019 கையாடல் செய்திருப்பதாகக் கணக்குத் தணிக்கை செய்யப்பட்டபோது கண்டுபிடிக்கப்பட்டது. மேல் நடவடிக்கைக்கு, காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தவறு செய்கிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்குமா? இம்மாதிரி மற்ற இடங்களில் கூட்டுறவு சங்கங்களில் நடந்தால் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, குற்றம் கண்ட இடத்தில் இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும். சற்று கால தாமதம் ஆகிறது என்பது உண்மை. இதற்காக, கூட்டுறவுச் சங்கங்களில் கண்டுபிடிக்கப்படும் குற்றங்களை மேல் நடவடிக்கை எடுக்க காவல் துறையின் தனிப்பகுதியை விரிவுபடுத்த வேண்டும் என்கின்ற செயற்குறிப்பு ஆய்வில் உள்ளது.

வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம், கடலூர்

*285 வினா.—**திரு. சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடலூரிலுள்ள வீடு கட்டும் கூட்டுறவு நிறுவனத்தில் பணம் கையாடல் செய்யப்பட்டதாக அதன் முன்னாள் தலைவர் மற்றும் இருவர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : ஆம்.

திரு. சி. கோவிந்தராஜன் : இந்த வழக்கின் நிலை எப்படி உள்ளது? என்னென்ன குற்றச்சாட்டுகள் மீது வழக்கு தொடரப்பட்டது ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவுச் சங்க முன்னாள் அதிகாரிகளான, சுப்பராயுலு ரெட்டியார் என்பவர் ரூ. 500 மோசடி செய்ததாகவும், 409 ஐ.பி.சி. செக்‌ஷன்படி வழக்குத் தொடரப்பட்டதாகவும், பானுகுமார் நயினர் என்பவர் ரூ. 405 மோசடி செய்ததாகவும், அவர்மீது ஐ.பி.சி. 408-ன் கீழ் கேஸ் போடப்பட்டதாகவும், ஏ. 3, சந்தானம் என்பவர் ரூ. 225 மோசடி செய்ததற்கு ஐ.பி.சி. 408-ல் கேஸ் போடப்பட்டதாகவும், அந்தக் கேஸுகளில், சந்தானம், சுப்பராயுலு ரெட்டியார் இருவர் மீதும் போடப்பட்ட கேசில் கோர்ட்டில் விடுதலை அளிக்கப்பட்டதாகவும், பானுகுமார் நயினர் இறந்துவிட்டதாகவும் தகவல் இருக்கிறது.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வழக்கு இன்னும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறதா? அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்களே, எந்த அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள் ? குற்றமே இல்லையென்று கருதி அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்களா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, கோர்ட்டி விருந்து அந்த இரண்டு பேர்களும் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆகவே, கேஸ் தள்ளுபடி செய்யப்பட்டது என்பதுதான் அர்த்தம். மேற்கொண்டும் தகவல்கள் வேண்டுமானால் உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால், விவரம் தரப்படும்.

கதலீஸ்வரர் கோயில்

*286 வினா.—**புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதியிலுள்ள திருக்களம்பூரில் அமைந்திருக்கும் கதலீஸ்வரர் கோயிலின் உள்சுற்றுப் பகுதியில், 'கதலி' என்று அழைக்கப்படும் வாழையினம் பல்லாண்டு காலமாகத் தாமே செழித்து வளர்ந்திருப்பதை ஆய்ந்து, பாதுகாக்க அரசு முற்படுமா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : திருமயம் வட்டம், திருக்களம்பூரில் உள்ள கதலீஸ்வரர் கோவிலில் கதலி வாழை மரங்கள் மனித முயற்சியின்றித் தாமாக ஏராளமாய் வளர்ந்திருப்பதாகவும், அவை அவ்வாறு வளர்ந்திருப்பது தெய்வ அம்சம் என்று உள்ளூர் மக்கள் கூறுவதாகவும் அறிவிக்கப்படுகின்றது. இந்த வாழை மரங்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கோவிலின் நிர்வாக அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

புலவர் பொ. பொன்னம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே, சித்த, ஆயுர்வேத மருத்துவ முறைகளில் சிறந்த மருந்துப் பொருளாகக் கருதப்படும் கதலி வாழை இனம் மிகவும் அரிதாக திருக்களம்பூரிலுள்ள கதலீஸ்வரர் கோவிலில் தாமாக வளர்ந்திருக்கிற காரணத்தால், அந்த இனத்தைப் பாதுகாப்பதற்காக தனிப் பணியாளர் ஒருவரை நியமித்து உரிய பாதுகாப்பு அளிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, அதுசம்பந்தமாகத்தான் என்னென்ன பாதுகாப்பு முயற்சிகளையெல்லாம் விரைவிலே செய்யலாம் என்று கோவில் நிர்வாக அதிகாரிகளை ரிப்போர்ட் கேட்டிருக்கிறோம். அந்த ரிப்போர்ட் வந்தபிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனைகளும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்டாயப் பணிக்கொடைத் திட்டம்

*287 வினா.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில், தொழிற்சாலைகளில் கட்டாய கிராஜுவடி திட்டத்தை அமுலாக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரமென்ன?